OPEN ACCESS

Volume: 4

Issue: 4

Month: April

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 1.3.2020

Accepted: 20.3.2020

Published: 01.04.2020

Citation:
Sathya, S & Sathish, A. (2020). Analogies Used by the Female Friend in Kurinji Tinai Verses of Kuruntokai. *Shanlax International Journal of Tamil Research*, *4*(4), 109–115.

DOI:
https://doi.org/10.34293/tamil.v4i4.2411

*Corresponding Author:
sathyasenthil77@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Analogies Used by the Female Friend in Kurinji Tinai Verses of Kuruntokai

**[1]S. Sathya* and [2]Dr. A. Sathish**

*[1]Full Time Ph.D. Research Scholar*
*Srimath Sivagnana Balaya Swamigal Tamil Arts Science College*
*Mailam, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0001-7111-0002

*[2]Assistant Professor, Department of Tamil*
*Srimath Sivagnana Balaya Swamigal Tamil Arts Science College*
*Mailam, Tamil Nadu, India*

**Abstract** – The article focuses on the Kurinichithinaiyil Thozhi Kootril Uvamial in Kurunthogai. 'Kurunthogai' is a classical Tamil poetic work in the second book of the "Ettuthogai" (Eight Anthologies). It is content matters were poem contains love and separation. Content matters were written by numerous authors. The ancient Sangam literature had witnessed the life style of the people in five phases of lands as Kurunji, Mullai, Neithal, Palai and Marutham. The first land surface is mountains and hills and the places is termed as 'Kurunchi'. There are many Uvamais in Kurunthogai. This research paper explains the Uvamais found in 'Kurunthogai Kurinji Thozhi Kottru Songs'.

**Key Words:** Sangam literature, Kurunthogai, Five lands, Kurinji landscap, Discourse.

## References

1. Kurunthogai Moolamum Uraiyum, (2017). Dr.U.Ve.Swaminatha Iyer, Dr.U.Ve.Sa. Nool Kilayam, Chennai
2. Perasiriyar (Uraiyasiriyar), (2017). Thokappiyam, (Meipattiyal, Uvamaiyil, Seyuliyal, Marpiyal) Kazhaka Veliyedu, Chennai.
3. Srinivasan, R. (1997). Sanga Illakkiyathil Uvamaikal, Aniyagam, Chennai,
4. Sanga Illakkiyathil Thozhi. (1986). Sarala Rasagopalan, Olipathipagam, Chennai.
5. Thokappiyam Porulathikaram, (1986). Nachinarkkiniyar Urai, Annamalai University.
6. Kurunthogai (Moolamum Uraiyum). (2015). Uraiyasiriyar Puliyur Kesigan, Chennai, Saratha Publication.
7. Kurunthogai (Moolamum Uraiyum), (2014). Uraiyasiriyar, Dr.V.Nagarasan, New Century Book House, Chennai.
8. Kuruntokai Kaṭṭum Akamarapuk Koṭpaṭum Paṇpaṭum, Dr.Su.A.Annaiyappan, (2016). Chennai, Tamilarasi Publication.
9. Kurunthogai (Moolamum Vilakka Uraiyum), (2013). Sakthidhasan Subramaniyan, Chennai, Mullai Pathippagam.
10. Kurunthogai (Kavithai Arimugam), (2014). Thiruventhi, Santhiya Pathippagam, Chennai.
11. Kurunthogai (Moolamum Eliya Uraiyum), (2017). Dr. Prabakaran Ra, Chennai. Kavya Pathippagam,
12. Kurunthogai Perunselvam, (2011). Sami. Chidamparanar, Poombugar Pathippakam.

# குறுந்தொகை குறிஞ்சித்திணையில் தோழி கூற்றில் உவமைகள்

***செ. சத்யா***
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை, அறிவியல் கல்லூரி, மயிலம்

***அ. சதீஷ்***
உதவிப் பேராசியரியர், தமிழ்த்துறை
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை, அறிவியல் கல்லூரி, மயிலம்

***ஆய்வுச் சுருக்கம்*** *– தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க இலக்கியம் தொடக்கமாகத் திகழ்கின்றது. சங்கப் பாடல்கள் செறிவாகவும், நேர்த்தியாகவும், இலக்கண அமைப்புடனும் உள்ளன. சங்க இலக்கியத்தில் பெண்களின் பங்களிப்பு தொன்மையானது. மனித சமுதாயத்தில் சரிபாதியாக விளங்கும் ஆண், பெண் இருபாலரில் பெண் என்பவள் உயிர் நாடியாக விளங்குபவள். குறுந்தொகையில் பெண், தாய், நற்றாய், செவிலி, தலைவி, தோழி, பரத்தை என்று பல கோணங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளாள். இவற்றில் தோழியானவள் தலைவி வாழ்க்கையில் முக்கியப் பங்காக விளங்குவதையும், தோழி கூற்றில் தோழியின் சொல்லாடலையும், ஆளுமைத்திறத்தையும் குறுந்தொகை குறிஞ்சித்திணையில் தோழி கூற்றில் அமைந்துள்ள பாக்களில் பயின்றுவந்துள்ள உவமைகள் முக்கியமானவை.*

***முதன்மைச் சொற்கள்:*** *சங்க இலக்கியம், குறுந்தொகை, ஐவகை நிலங்கள், தோழி, உவமைகள், குறிஞ்சி, கூற்று, சொல்லாடல்.*

## முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாறு நெடிய பாரம்பரியம் கொண்டது. இதில் சங்க இலக்கியம் தமிழின் தொடக்கமாகத் திகழ்கின்றது. சங்க இலக்கியப் பாடல்கள் செறிவாகவும், நேர்த்தியாகவும், இலக்கண அமைப்புடனும் உள்ளன. சங்க இலக்கியத்தில் பெண்களின் பங்களிப்பு தொன்மையுடையது. மனித சமுதாயத்தில் சரிபாதியாக விளங்கும் ஆண், பெண் இருபாலரில் பெண் என்பவள் உயிர் நாடியாக விளங்குபவள். குறுந்தொகையில் பெண், தாய், நற்றாய், செவிலி, தலைவி, தோழி, பரத்தை என்று பல கோணங்களில் சித்திரிக்கப்பட்டுள்ளாள். தோழியானவள் தலைவி வாழ்க்கையில் முக்கியப் பங்காக விளங்குவதையும், தோழி கூற்றில் தோழியின் சொல்லாடலையும், ஆளுமைத்திறத்தையும் குறுந்தொகை குறிஞ்சித்திணையில் தோழி கூற்றில் அமைந்துள்ள பாக்களில் உவமைகளை ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

## தோழி

தோழியானவள் குறுந்தொகையில் சிறப்புற்று மிகுந்த அறிவுத்திறனையும், மதிநுட்பத்தையும், அன்பையும் உடையவளாக விளங்குகின்றாள். அகப் பொருள் பற்றிய பாடல்களில் வரும் மாந்தர்களின் பெரும் பொறுப்பினை உடையவள் தோழி. தலைவி மற்றும் தலைவனுக்கு வழிகாட்டியாகவும் திகழ்கின்றாள்.

தலைவன், தலைவி, செவிலி முதலியரோடு உரையாடும்போது தோழியானவள் அவர்களின் மனநிலையை அறிந்து பேசுபவளாகவும், சொல்திறன் மிக்கவளாகவும், தலைவியின் அகவாழ்வில் உள்ள களவு மற்றும் கற்பு என இருவேறு கூற்றுகளிலும் தோழியின் பங்கு முதன்மை பெருகின்றது.

தலைவிக்குத் தோழி சிறப்பானவளாகவும், தன்னலம் கருதாதவளாகவும் தலைவியின் நலம் நாடுபவளாகவும் சித்தரிக்கப்படுவதனைத் தொல்காப்பியர்,

**"நாற்றமுந் தோற்றமு மொழுக்கமு முண்டியுஞ்**
**செய்வினை மறைப்பினுஞ் செலவினும் பயில்வினும்**
**புணர்ச்சி யெதிர்ப்பா டுள்ளுறுத்து வருஉ**
**முணர்ச்சி யேழினும் முணர்ந்த பின்றை**
**மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது**
**பல்வேறு கவர்பொரு ணாட்டத் தானும்"**
**(தொல்காப்பியம், பொருள், களவு, நூற்பா - 1060)**

என்று தோழியின் பிறப்பிற்குச் சிகரம் வைக்கின்றது தொல்காப்பியம்.

தலைவி, தலைவன் மேல் கொண்டிருக்கும் அன்பிற்கு ஈடாகத் தலைவி மேல் மிகுந்த அன்பும், அக்கறையும் உடையவளாகத் தோழி உள்ளாள். தலைவியின் களவொழுக்கத்தை மெல்ல பெற்றோரிடம் வெளிப்படுத்தி, அவளுக்கு விரும்பிய வாழ்க்கையை ஏற்படுத்தித் தரும் தோழி, இல்லற வாழ்க்கையில், தலைவன் பிரிந்து சென்றபோது தலைவனின் நற்பண்புகளைக் கூறித் தலைவியை ஆற்றுவிப்பவளாகவும், ஆற்றுப்படுத்த இயலாத நிலையில்,

**"இவள் தன்**
**மடன் உடை மையின் உயங்கும் யான் அது**
**அஞ்சுவல் பெரும! என்நெஞ் சத்தானே"**

என்று தலைவியின் அறியாமையை எண்ணி வருந்துபவளாகவும், பிரிவின் போது தலைவியின் மென்மையான குணங்களையும், ஆற்றாமைத் தன்மையையும் தலைவனிடம் கூறி விரைந்து வரச் செய்பவளாகவும் இருக்கின்றாள் தோழி. தலைவன், தலைவி, பெற்றோர் ஆகியோருக்கெல்லாம் நடுநிலைப் பாத்திரமாகத் தோழி கட்டமைக்கப்பட்டிருக்கிறாள்.

### தோழி தலைவியோடு உரையாடுதல்

குறுந்தொகை குறிஞ்சித்திணையில் தோழி தலைவியோடு உரையாடுவதாக 30 பாடல்கள் காணக்கிடைக்கின்றன. இவற்றில் உவமைகள் மட்டும் இடம்பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை 19 ஆகும்.

நீண்ட நேரமாகக் கட்டி வைத்திருந்து திடீரென அவிழ்த்து விடப்பட்ட குதிரை, எழுச்சிகொண்டு துள்ளிக் குதித்து எழுந்தாற் போன்று எழும் எழுச்சியையுடைய காற்றினால் கீழே வளைந்துப் பின் விட்டமையால் மேலெழுந்து வானத்தைத் தொடும் பசிய மூங்கிலையுடைய மலையைச் சார்ந்தவன் தலைவன் என்று தோழி சுட்டிய உவமையினை,

**"விட்ட குதிரை விசைப்பின் அன்ன**
**விசும்புதோய் பசுங்கழைக் குன்ற நாடன்"**
**(குறுந்.74:1-2)**

என்ற பாடல் வரிகள் அழகாக எடுத்துரைக்கின்றன. இதில், தோழியால் எடுத்தாளப்பட்டுள்ள மூங்கில் மற்றும் குன்ற நாடன் என்பனக் குறிஞ்சியைப் புலப்படுத்தி நிற்பனவாகும். நம் கற்பிற்கு ஏதும் பாதகம் நேர்ந்துவிடுமோ என்று தலைவி அஞ்சி நடுங்கியக் காட்சியானது தெய்வத்தால் விரும்பப்பட்டவர் ஆவேசம் வந்து செயல்படுவது போலிருந்தது எனத் தோழி உவமையுடன் உரைத்ததை,

**"சூர்நசைந் தனையையாய் நடுங்கல் கண்டே"**
**(குறுந். 52:2)**

என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றது.

போர்செய்த யானையின் செங்குருதிப் புண்பட்ட புள்ளியை உடைய முகத்தைப் போல், பொதுவிடத்தில் உள்ள குண்டுக் கல்லின்மேல், ஒளி பொருந்திய செங்காந்தள் மலர்கள் பல ஒருங்கே மலர்கின்ற நாட்டை உடையவன் தலைவன் என்று உவமையுடன் தோழி எடுத்துரைப்பதை,

**"பொருந யானைப் புகர்முகங் கடுப்ப**
**ஒண்செங் காந்தள் அவிழும் நாடன்"**
**(குறுந்.284:1-3)**

குறுந்தொகைப்பாடலடிகள் சுட்டுகின்றன. இப்பாடலில், போர் செய்ததால் யானையின் முகத்தில் உண்டான புண்ணும், இயல்பாக உள்ள புள்ளிகளும் பாறையின் மேல் மலர்ந்திருக்கும் செங்காந்தள் மலர்களுக்கு உவமையாகக் கையாளப்பட்டுள்ளன.

குறுந்தொகையுள் தோழி தலைவியுடன் சொல்லாடுவதாக 3, 73, 111, 143, 167, 176, 259, 265, 268, 298, 339, 346, 357, 373, 374 மற்றும் திணை மயங்கி பாலையில் 297 எனும் பாடல்களிலும் குறிஞ்சிக்குரிய முதல், கரு மற்றும் உரிப்பொருட்களை உவமையின் வழியாக வெளிப்படுத்தும் தோழியின் அறிவுத் திறன் போற்றத்தக்கதாகும்.

### தோழி தலைவனோடு உரையாடுதல்

குறுந்தொகையில் தோழி தலைவனோடு பேசுவதாக அமைந்த பாடல்களின் எண்ணிக்கை 23 ஆகும். இவற்றில் 16 பாடல்களில் உவமைகள் இடம்பெற்றுள்ளன.

தலைவியை அடைய விரும்பும் தலைவன் தோழிக்குக் கையுறையாகச் செங்காந்தாள் மலர்களை வழங்குகின்றான். அதனை மறுக்கும் தோழி,

**"குருதிப் பூவின் குலைக் காந்தட்டே"**
**(குறுந்.1:4)**

என உவமை கூறுகின்றாள். காந்தாள் மலரின் வண்ணமானது குருதியின் சிவந்த நிறத்தினை ஒத்ததாகக் காணப்படும் என்னும் பொருள் இதனுள் அமையப்பெற்றுள்ளது.

பலா மரத்தின் சிறிய கிளையில் பெரிய பழம் தொங்குவது போன்று தலைவியின் சிறிய உயிர் கொண்ட இவள் உடம்பில் காமமாகிய நோய் மிகப் பெரியதாக உள்ளது என்னும் உவமையினை,

**"சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்**
**உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே"**
**(குறுந்.18:4-5)**

என்ற குறுந்தொகைப் பாடலடிகள் கூறுகின்றன. இது தலைவியின் துயரினைத் தலைவனுக்கு உவமையின் வழியாக எடுத்துரைக்கும் கூற்றாக அமையப்பெற்றுள்ளது.

கரிய அடிப்பாகத்தையுடைய வேங்கை மரத்தின் மஞ்சள் நிறமுள்ள மலர்கள் துறுகல் (உதிர்ந்த பாறை) மீது உதிர்ந்து கிடக்கும் காட்சியானது பெரிய புலிக்குட்டியின் உருவத்தைப் போன்று தோற்றமளிக்கும் என்ற உவமையினை,

**"கருங்கால் வேங்கை வீயுகுதுறுகல்**
**இரும்புலிக் குருளையின் தோன்றுங்**
**காட்டிடை" (குறுந்.47:1-2)**

என்ற குறுந்தொகைப் பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன. இதில், பயின்று வந்துள்ள வேங்கை மரம், துறுகல், புலி ஆகியனக் குறிஞ்சியைக் குறித்து நிற்பனவாகும்.

தினைப்புனக் காவலுக்குச் தலைவியுடன் செல்லும் தோழியானவள் தலைவனை அங்கு வருக எனக் கூறும்பொருட்டு கையாளும் உவமையினை,

**"கரும்பு மருள் முதல பைந்தாள் செந்தினை**
**மடப்பிடித் தடக்கை அன்னபால் வார்பு"**
**(குறுந்.198:2-4)**

என்ற குறுந்தொகைப் பாடலடிகள் நயம்பட எடுத்துரைக்கின்றன. இப்பாடலில் செழிப்பான நிலத்தில் விளைந்த தினையின் தாள்கள் கரும்பு போன்று முதிர்ந்த தினைக்கதிர், பிடியின்(யானை) தும்பிக்கைப் போன்று காட்சி அளிப்பதனை இது வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. நீண்ட தினைக்கதிருக்கு தும்பிக்கை உவமையாக வந்துள்ளதைக் காணலாம். தோழியால் குறிப்பிடப்பட்டுள்ள தினை. பிடி எனும் கருப்பொருட்களும், புணர்தல் எனும் உரிப்பொருளும் குறிஞ்சியைக் குறிப்பதாக உள்ளன.

யாம் செய்த உதவிகளை ஏற்று எப்போதும் எம்மை மறவாது நன்றியோடு அமைக என வரைவிடை வைத்துப் பிரியும் தலைவனுக்கு உவமையோடு தோழி எடுத்துரைப்பதனை,

**"கெட்டிடத் துவந்த உதவி கட்டில்**
**நன்றிமறந் தமையா யாயின் மென்சீர்க்**
**கலிமயிற் கலாவத் தன்ன இவள்**
**ஒலிமென் கூந்தல் உரியவா நினக்கே"**

**(குறுந்.225:3-7)**

என்ற குறுந்தொகைப்பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன. மேலும், இப்பாடலில் பெரிய மலைகளை உடைய நாடனே! தான் துன்புற்ற காலத்தில் பிறரிடமிருந்து பெற்று மகிழ்ந்த உதவியை, அரசுக் கட்டிலாகிய சிறப்பைப் பெற்றவுடன் மறந்துவிட்ட அரசனைப்போல, நீ நாம் செய்த நற்செயல்களை மறவாது இருப்பாயானால், இத்தலைவியின், மெல்லிய சிறப்புடைய ஆரவாரிக்கும் மயிலினது தோகையைப் போன்ற தழைத்த மென்மையான கூந்தல் உனக்கே உரியதாகும் எனத் தலைவியின் கூந்தலை மயிலின் தோகை போன்று உள்ளதாக தோழி கூறும் உவமை இடம்பெற்றுள்ளது. இவ்வுவமைகளில் கையாளப்பட்டுள்ள புணர்தல் மற்றும் மயில் முதலியன குறிஞ்சி யைக் குறித்து நிற்பனவையாகும்.

சிறிய தினையானது விளைந்துகிடக்கும் அகன்ற இடத்தையுடைய பெரிய கொல்லையில் தினை விளைந்து கதிர் அறுக்கும் நிலையிலிருப்பதை எடுத்துரைத்துப் பகற் குறியையும், காவலர்கள் தினையினைக் காக்க இரவு முழுவதும் உறங்காதிருக்கவும், காட்டு விலங்குகளால் துன்பம் அடையாமல் இருக்கவும் குறிஞ்சி நிலத்திற்குரிய தொண்டகப்பறையை முழக்குதலைக் கூறி இரவுக்குறியையும் மறுப்பதனைத் தோழி உமையாகச் சொல்வதனை,

**"சிறுதினை விளைந்த வியன்கண் இரும்புனத்து**
**யாமம் காவலர் அவியா மாறே"**

**(குறுந்.375:3-6)**

குறுந்தொகைப் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன். இப்பாடலில், பெரிய தினைப்புனமாகையால், அது இரவிலும் பகலிலும் அறுவடை செய்யப்படுகிறது. தலைவி தலைவனைப் பகலிலும் சந்திக்க இயலாது. இரவிலும் சந்திக்க இயலாது. அதனால் திருமணம் செய்து கொள்வதே சிறந்தது என்று தோழி குறிப்பால் உணர்த்துகின்றாள்.

குறுந்தொகையுள் தோழி தலைவனுடன் சொல்லாடுவதாக 138, 159, 244, 292, 353, 365, 392, 394, மற்றும் திணை மயங்கி நெய்தலில் 81, 336 எனும் பாடல்களிலும் குறிஞ்சிக்குரிய முதல், கரு மற்றும் உரிப்பொருட்களை உவமையின் வழியாக வெளிப்படுத்தும் தோழியின் மதிநுட்பம் போற்றத்தக்கதாகும்.

## குறுந்தொகையில் தோழி செவிலியோடு உரையாடுதல்

குறுந்தொகையில் தோழி செவிலியோடு உரையாடுவதாக 4 பாடல்கள் அமையப் பெற்றுள்ளன. இவற்றுள் 3 பாடல்களில் மட்டுமே உவமைகள் பயின்று வந்துள்ளன.

தலைவியின் களவொழுக்கத்தினை அறியாத தாய்க் கட்டுவிச்சியை அழைத்துக் கட்டுக் காணியவிடத்து அறத்தொடு நிற்கும் தோழி,

**"அகவன் மகளே அகவன் மகளே**
**மனவுக் கோப்பு அன்ன நல்நெடுங் கூந்தல்"**
**(குறுந்.23:1-2)**

என்று உவமை கூறுகின்றாள். சங்கு மணிகளால் ஆகிய கோவை போன்று வெண்ணிறமுடைய நீண்ட கூந்தலை உடைய கட்டுவிச்சியே எனத் தோழி அழைக்கின்றாள். கட்டுவிச்சி அணிந்துள்ள சங்கு மணிகளே அவளுடைய கூந்தலுக்கு உவமையாகி உள்ளன.

வேங்கை மரத்தின்மேல் வளர்ந்த பெரிய கிளையில் இருந்த மயிலானது, அதன் மலர்களைக் கொய்யும் மகளிரைப் போன்று தோற்றமளித்ததாகத் தோழி கூறும் உவமை அமைந்துள்ளதை,

**"மேக்கெழு பெருஞ்சினை இருந்த தோகை**
**பூக்கொய் மகளிரிற் றோன்று நாடன்**
**தகாஅன் போலத் தான்றீது மொழியினும்"**
**(குறுந்.26:2-4)**

என்று குறிப்பிடுகிறாள்,

**"தேக்கொக் கருந்து முள்ளெயிற்றுத் துவர்வாய்**
**கடுவனும் அறியும்அக் கொடியோ னையே!"**
**(குறுந்.26:6-8)**

தலைவன் தலைவிக்கு தகுதியானவன் இல்லாதவன் என்பது போல, தலைவியின் நோய்க்குத் தெய்வமே காரணம் எனத் தீமை பயக்கும் மொழிகளை கட்டுவிச்சியானவள் கூறுகின்றாள் எனவும், கடுவனின் பற்கள் முள்ளைப் போல் கூர்மையுடையன எனவும், அந்தக் கொடியவனாகிய தலைவனை அந்த ஆண் குரங்கும் அறியும் என்பதனை அறத்தோடு நின்று உவமைகளுடன் எடுத்துரைக்கின்றாள், தோழி. மேற்கண்ட உவமைகளில் எடுத்தாளப்பட்டுள்ள வேங்கை, மயில், கட்டுவிச்சி, கடுவன் என்பனக் குறிஞ்சிக்குரியவை.

தலைவியைப் பிரிந்திருந்த தலைவன் தலைவியை மணக்க விரைவில் வருவான் எனக் கூறும் செவிலியை உவமையோடு பாராட்டும் தோழியின் கூற்றாக,

**"தம்மில் தமதுண் டன்ன சினைதொறும்**
**..**
**ஓங்குமலை நாடனை வரும் என்றாளே"**
**(குறுந்.83:3-5)**

எடுத்துரைக்கின்றது. இப்பாடலில், தமது வீட்டில் இருந்து தன் முயற்சியால் ஈட்டிய பொருளால் பெற்ற உணவை உண்ணுவதைப் போன்ற இனிய சுவையினைத் தரும் பலா மரங்களையுடைய உயர்ந்த மலைகளையுடை குறிஞ்சிநிலத் தலைவன் எனத் தோழி உவமையோடு உரைக்கிறாள். இப்பாடல் வரிகளில் பலா, மலைநாடன் என குறிஞ்சிக்குரிய கருப் பொருட்களே எடுத்தாளப்பட்டுள்ளது.

இதுபோன்று குறுந்தொகையுள் தோழி செவிலியோடு சொல்லாடுவதாக 379 எனும் பாடலிலும் முதல், கரு மற்றும் உரிப்பொருட்களை உவமையின் வழியாகத் தோழியின் அறிவுத் திறன் வெளிப்படுகிறது.

## ஆய்வு முடிவுரை

அகத்திணைகள் ஐந்தனுள் தோழி கூற்றுப் பாடல்கள் மிகுதியாகக் காணப்படுவது குறிஞ்சித்திணையலாகும். தோழி கூறும் உவமைகளில் மலை நாடன், குன்றநாடன், கட்டுவச்சி என மக்கள் பெயரும், கடுவன், மந்தி, புலி, என்ற விலங்கினங்களையும், மூங்கில், செங்காந்தள், பலா, வேங்கை, தினை எனும் தாவரங்களையும், மயில் என்ற பறவையையும் உவமையுடன் எடுத்துரைத்துள்ளதை அறிய முடிகின்றது. குறிஞ்சி நிலத்தினைத் தன் வாழ்விடமாகக் கொண்ட தோழியின் கூற்றுகளில் குறிஞ்சிக் குரியப் பின்னணிச் சூழல்களே உவமைகளாகக் கையாளப்பட்டுள்ளன. குறிஞ்சியில் நெய்தல் மயங்குவதாக இரு பாடல்களும், பாலை மயங்குவதாக ஒரு பாடலும் அமைந்துள்ளன. பல்வேறு திறன்களின் மூலமாகத் தோழியானவள் குறுந்தொகையில் சிறப்பான இடத்தினைப் பெற்று விளங்கி வருகின்றாள். குறுந்தொகையில் தோழி கூற்றுப் பாடல்கள், தோழியின்

பன்முக ஆற்றல்களையும், அவர்களின் அன்பு நிலைகளையும், உறவுகளையும், குடும்ப வாழ்க்கைக் குறித்த தோழியின் அக்கறையையும் புலப்படுத்தி உண்மையான தோழியின் இயல்புகளையும், கடமைகளையும் உணர்த்தி நிற்பனவாக அமைந்துள்ளன.

**பார்வை நூல்கள்**

1. குறுந்தொகை மூலமும் உரையும், உ.வே. சாமிநாதையர், டாக்டர். உ.வே.சா, நூல் நிலையம், சென்னை.
2. பேராசிரியர் (உ.ஆ), தொல்காப்பியம், (மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல்) கழக வெளியீடு, சென்னை.
3. சீனுவாசன். ரா, சங்க இலக்கியத்தில் உவமைகள், அணியகம், சென்னை.